சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்

**EA.4/2022 in EP..No. 12 / 2022**

எ.ம.சா.2 வரதராஜன் 24.10.2024

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:

கடந்த 03.09.2004-ம் தேதி அச்சமநாயக்கர் மகன் சுப்பிரமணி என்பவருக்கு நான் ஒரு கிரைய பத்திரம் எழுதிக் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த கிரையம் தாவா சொத்தின் ஒரு பகுதி என்னால் கிரையம் செய்து கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணத்தில் எனக்கு தனிப்பட்ட சுயாஜிதமான சொத்தை நான் கிரையம் செய்து கொடுப்பதாக தான் அந்த கிரைய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் கிரைய பத்திரம் தான் நான் சுப்பிரமணிக்கு எழுதிக் கொடுத்த கிரைய பத்திரம் என்றால் சரிதான். அந்த ஆவணம் எ.ம.சா.ஆ,1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் ஏற்கனவே தாவா சொத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளதால் மனுச் சொத்தை 1-ம் எதிர்மனுதாரர் வசம் ஒப்படைப்பு செய்வதை தடுப்பதற்கு எனக்கு எந்தவித அதிகாரமும் கிடையாது என்றால் சரியல்ல. நான் எனது மனைவி மற்றும் எனது மகள் ஆகிய மூவரும் ஒன்று சேர்ந்து கொண்டு மனுதாரர் அசல் வழக்கில் பெற்ற தீர்ப்பாணையின் பலனை அடைய விடாமல் இதுபோன்ற இடைமனுக்களை தாக்கல் செய்து காலதாமதப்படுத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. நானே எனக்கு சுயராஜிதமாக பாத்தியப்பட்ட சொத்து என்று குறிப்பிட்டு கிரையம் செய்து கொடுத்துவிட்டு அதற்கு மாறுபட்டு அந்த கிரைய சொத்தில் எனது மகள்களுக்கு உரிமை உள்ளது என்று முரண்பட்டு மனுவை தாக்கல் செய்து அதன் பேரில் நான் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:

எனது மகன் சுப்பிரமணி ஆதியில் எனக்கு எதிராக பாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அது எனக்கு விரோதமாக தீர்ப்பாகிஉள்ளது என்றால்

சரிதான் அதன்பேரில் நான் செய்த மேல்முறையீடும் எனக்கு எதிராக தீர்ப்பாகிஉள்ளது என்றால் சரிதான். ஏற்கனவே வழங்கப்பட்ட தீர்ப்பில் எ.ம.சா.ஆ,1-ல் கண்ட சொத்து உள்ளடக்கி தான் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசல் ஒப்படைப்பு மனுவில் அதை அனுமதித்து உத்தரவிடக்கூடாது என்று எனது மனைவி ஒப்படைப்பு மனு தாக்கல் செய்து அதை அனுமதிப்பதற்கு ஆட்சேபித்து எனது மனைவி தான் மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் அதில் எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஒப்படைப்பு மனுவில் சொல்லப்பட்டுள்ள சொத்து விபரம் தவறு.

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2024.10.28 17:28:16 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்